In the Court of the Principal District & Sessions Judge, Thoothukudi
Case No : SC.514/2023
Deposition of P.W.3
****

Name திரு.மாரிச் செல்வம்

Father's Name

Village

Taluk

Calling

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 29th day of July 2025.

**Accused present.**

**முதல் விசாரணை :**

நான் தற்போது ஆறுமுகநேரி S.S.கோவில் தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்து போன பால்லிங்கத்தை தெரியும், அவர் எனது சித்தப்பா பையன் தான். அ.சா.1, அ.சா.2–ஐ தெரியும். எனது உறவினர்கள் தான். நாங்கள் எல்லோரும் கொத்தனார் வேலை பார்த்து வருகிறோம். ஆஜர் எதிரியைத் தெரியும். அவர் எங்கள் ஏரியா தான். எதிரியும் நானும் ஒரே தெருவில் தான் வசிக்கிறோம். இறந்து போனவர் காணியாளர் தெரு. இரண்டு தெருக்களும் பக்கத்து பக்கத்தில் உள்ளது. எனது மாமா லிங்கம், அவருடைய மனைவி துர்க்காதேவி எனது அத்தை ஆவார். எனது அத்தை மகளிர் குழுவில் இருக்கிறார். எதிரியின் மனைவி கவிதாவும் அந்த குழுவில் இருக்கிறார். எனது அத்தை கவிதாவிடம் பணம் செலுத்துவதற்கு லேட் ஆனதால் பணம் குறித்து கேட்டார். அதனால் அவர்கள் இரண்டு பேருக்கும் வாய்த் தகராறு ஏற்பட்டது. அதனால் எதிரியின் மனைவி அந்த விசயத்தை எதிரியிடம் சொன்னார். அதனால் லிங்கராஜா எனது அத்தையிடம் சென்று கேட்டு சத்தம் போட்டார். எங்கள் அத்தை மாமாவிடம் சொன்னார். பிறகு மாமாவும் என் தம்பி பால்லிங்கமும் போய் லிங்கராஜாவிடம் கேட்டார்கள். அதனால் அவர்களுக்குள் சண்டை ஏற்பட்டு பால்லிங்கம் லிங்க ராஜாவை அடித்து விட்டார். அதன் பிறகு இரண்டரை வருடம் வரை எந்த பிரச்சினையும்

RAMANUJAM VASANTHI

Digitally signed by RAMANUJAM VASANTHI
Date: 2025.07.29 15:23:46 +0530

இல்லை. 05.10.2020 அன்று சாயங்காலம் வேலையை முடித்து விட்டு சம்பளம் வாங்குவதற்காக ஆறுமுகநேரி ஸ்டேட் பாங்க் எதிரில் கோட்டாளம் கறிக்கடை அருகே பேசிக் கொண்டு இருந்தோம். அப்போது அங்கு நான், ராமு, பொன்துரை மற்றும் பால்லிங்கம் ஆகியோர் அங்கு நின்று பேசிக் கொண்டு இருந்தோம். நாங்கள் லிங்கதுரை என்பவரிடம் வேலை பார்த்தோம். லிங்கராஜா அப்போது பின்புறமாக வந்து ஏலே புண்டா மவனே என்று ஏசி எல்லோர் முன்னாடியும் என்ன அசிங்கப்படுத்தினியே, அதனால நீ இனிமே உயிரோடு இருக்க கூடாது, செத்து தொல என்று எதிரி சொல்லி அரிவாளை தூக்கி முதுகுக்கு பின்னாடி இருந்து பால்லிங்கத்தை வலது பக்க கழுத்தில் இருந்து கன்னம் வரை வெட்டினார். யாராவது பக்கத்துல வந்தா உங்களயும் சேர்த்து வெட்டிடுவேன் என்று எதிரி எங்கள் மூவரையும் மிரட்டினார். எதிரி உடனே பைக்கில் போய்விட்டார். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் அரிவாள் தான் எதிரி சம்பவத்தின் போது பயன்படுத்தியது. பால்லிங்கம் மூச்சு பேச்சு இல்லாமல் கீழே கிடந்தார். அதன் பிறகு ஆம்புலன்சுக்கு போன் செய்தோம். சிறிது நேரத்தில் ஆம்புலன்சு வந்தது. அவரை ஆம்புலன்சில் ஏற்றி திருச்செந்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். எனது தம்பி பால்லிங்கத்துடன் ஆம்புலன்சில் நான், ராமு, பொன்துரை போனோம். அங்கே ஆஸ்பத்திரியில் டாக்டர் பார்த்து பால்லிங்கம் இறந்து விட்டதாக சொன்னார். நாங்கள் மூவரும் போய் இரவு 10, 10.30 மணியளவில் புகார் கொடுத்தோம். எங்களுடன் குடும்பத்தினர் வந்திருந்தனர். இது சம்பந்தமாக இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்குவிசாரணை :</u>

நான் 8 ம் வகுப்பு படித்திருக்கிறேன். போலீஸ் ஸ்டேஷன் சென்ற போது, சொல்ல சொல்ல புகாரை போலீசார் தான் எழுதினர். அந்த புகாரில் தான் ராமு கையெழுத்திட்டார் என்றால் சரிதான். அதில் நான் எந்த கையெழுத்தும் போடவில்லை. நாங்கள் போலீஸ் ஸ்டேஷன் போகும் போது மணி 10 ,10.30 இருக்கும். நான் தான் ஆம்புலன்சுக்கு போன் செய்தேன். ஆம்புலன்சு 108 ஆம்புலன்சா அல்லது பிரைவேட் ஆம்புலன்சா என்று அந்த பதட்டத்தில் நான் கவனிக்கவில்லை. சம்பவ இடத்திற்கு நான், ராமு, பொன் துரை இரண்டு பைக்குகளில் வந்தோம். நான்கு பேரும் இரண்டு வண்டிகளில் மொத்தமாக வந்தோம். சம்பவம் நடக்கும் போது சம்பவ இடத்தில்

RAMANUJAM VASANTHI

Digitally signed by RAMANUJAM VASANTHI
Date: 2025.07.29 15:23:53 +0530

நாங்கள் நால்வரும் தான் பேசிக் கொண்டிருந்தோம். அருகில் வேறு யாரும் இல்லை. நான் வெட்டிய பிறகு தான் பார்த்தேன் என்றால் இல்லை, வெட்டும் போதே பார்த்தேன். எந்த திசையில் இருந்து எதிரி வந்தார் என்று பதட்டத்தில் நியாபகமில்லை. எதிரி என்ன ஆடை அணிந்திருந்தார் என்று நியாபகமில்லை. எதிரி எதில் வந்தார் என்று எனக்கு தெரியாது. வெட்டும் போது யாரும் தடுக்கவில்லை என்றால் தடுக்க முடியவில்லை. இறந்த பால்லிங்கத்தை ஏலே புண்டா மவனே இரண்டு வருடத்திற்கு முன்னாடி என்னை எல்லார் முன்னாடியும் அசிங்கப்படுத்தினலே இனிமே உயிரோடு இருக்க கூடாது செத்து தொல என்று ஏசிக் கொண்டே வெட்டினார். நான், ராமு, பொன்துரை ஆகிய மூவரும் தனியாக பேசிக் கொண்டும், இறந்த பால்லிங்கமும் கீரைக்காரரிடம் பேசிக் கொண்டும் இருந்தார் என்றால் சரியல்ல. பக்கத்து பக்கத்தில் நின்று பேசிக் கொண்டிருந்தோம். எதிரி பால்லிங்கத்திடம் சாதாரணமாக பேசிக் கொண்டிருந்தார் என்றால் தவறு. சம்பவ இடத்தில் இருந்து போலீஸ் ஸ்டேஷன் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் ஒரு 200 மீட்டர் துாரம் இருக்கும். வெட்டிய உடன், பால்லிங்கத்தை நான் துாக்கி பார்த்தேனா என்றால் இல்லை. போலீசார் வந்து விட்டனர். போலீசார் எங்களை விசாரித்தனரா என்றால் எங்கள் மூவரையும் யார் என்ன என்று கேள்வி கேட்டனர். ஆம்புலன்சில் வந்தவர்கள் பால்லிங்கத்தை சோதித்து ஏதேனும் சொன்னார்களா என்றால் இல்லை. ஆம்புலன்சு வந்தவுடன் பால்லிங்கத்தை ஆம்புலன்சில் ஏற்றி விட்டனர். ஆம்புலன்சு வந்த பிறகு தான் பால்லிங்கத்தை துாக்கி ஆம்புலன்சில் ஏற்றினோம். அவரை துாக்கியதால் என்னுடைய கைகளில் இரத்தக் கறை இருந்தது. ஆடைகளிலும் இரத்தக் கறை இருந்ததா என்றால் இருந்தது. நாங்கள் மூவரும் சேர்ந்து தான் துாக்கினோம். அதனால், எங்கள் உடைகளில், கைகளில் இரத்தக் கறை இருந்தது. அவர் இறந்து விட்டார் என்று மருத்துவமனையில் சொன்னதும், நாங்கள் காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க வந்தோம். ஆஸ்பத்திரியில் இருந்து காவல் நிலையத்திற்கு வரும் போது பஸ்சில் வந்தோம். புகார் கொடுக்க வந்த போதும் ஆடைகளில் இரத்தக் கறை இருந்தது என்றால் சரிதான். எங்கள் உடையை போலீசார் வாங்கவில்லை. எதிரி வெட்டி விட்டு எந்த திசையில் போனார் என்று நான் சரியாக கவனிக்கவில்லை. சம்பவ இடத்தில் நான் இருந்ததாக சொன்னது பொய் என்றால் சரியல்ல. எதிரி வெட்டியதை பார்த்ததாக நான் சொல்வது

RAMANUJAM VASANTHI
Digitally signed by RAMANUJAM VASANTHI
Date: 2025.07.29 15:24:00 +0530

பொய் என்றால் சரியல்ல. அன்றைய இரவே போலீசார் 10, 10.30 என்னை விசாரித்தனர். 05.10.2020 அன்று இரவு தான் போலீசார் என்னை விசாரித்தனர் என்றால் சரிதான். அதற்கு பிறகு என்னை விசாரிக்கவில்லை. இந்த வழக்கிற்காக உருவாக்கப்பட்ட சாட்சி நான் என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :**

**இல்லை.**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் எதிரி/எதிரிகள் தரப்பு முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/கைரேகை செய்யப்பட்டது.

RAMANUJAM VASANTHI

Digitally signed by RAMANUJAM VASANTHI
Date: 2025.07.29 15:24:06 +0530

**முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தூத்துக்குடி.**